සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கைத் திட்டமிடல் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட / திறந்த போட்டிப் பரீட்சை 2011(2012)**

Open / Limited Competitive Examination for Recruitment to Grade III of the Sri Lanka Planning Service - 2011 (2012)

(01) கிரகித்தல்
Comprehension

இரண்டு மணித்தியாலம்
Two hours

**எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.

**1.** பின்வரும் தலைப்புக்களுள் **ஒன்றைத்** தெரிந்து ஒரு கட்டுரை எழுதுக.

(i) கனிய எண்ணெய் நெருக்கடியினால் இலங்கைப் பொது மக்கள் மீது ஏற்பட்டுள்ள தாக்கம்.

(ii) இலங்கையில் யுத்தத்திற்குப் பிந்திய சூழ்நிலையும், பொருளாதார அபிவிருத்திக்கான புதிய உபாய வழிகளும்.

(iii) மனித உரிமைகளை மீறுவதனால் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகப் பலம் வாய்ந்த உலக நாடுகளின் தலையீடு.

(iv) இலங்கையில் மனித படுகொலைகள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் ஆகியவற்றால் அற்றுப் போகும் பாரம்பரிய நன்னெறிகள்.

(v) இலங்கையின் சுற்றுலா தொழிலும், தேசிய கலாசாரத்தின் தனித்துவத்தைப் பாதுகாத்தலும்.

(35 புள்ளிகள்)

**2.** பின்வரும் பந்தியை வாசித்து, அதன் சொற்களின் எண்ணிக்கையை **மூன்றில் ஒன்றாகும்** வகையில் பொழிப்பாகத் தருக.

முக்கியமாக அரச துறையின் தனியுடைமையாகப் பேணப்பட்டு வரும் இலங்கையின் பல்கலைக்கழகக் கல்வி, தொழில் சந்தையின் தேவைக்கு ஏற்றவாறு தரமான கல்வியை வழங்க முடியாமல் இருத்தல் நிலவும் கேள்விக்கு ஏற்றவாறு வழங்க முடியாமல் இருத்தல் ஆகிய விடயங்களினால் பிரச்சினைகளுக்கு உட்பட்டுள்ளது. தனியார் பல்கலைக்கழகங்களை ஏற்படுத்தல், வருமானம் குறைந்த மாணவர்களின் உயர் கல்விக்கான வாய்ப்பினை கட்டுப்படுத்தும் எனக் கருதி, பல தசாப்தங்களாக உயர் கல்விக்கான தனியார் துறையின் பங்களிப்புக்குத் தடை ஏற்படுத்தப்பட்டது. எனினும் இலங்கையின் பொதுப் பல்கலைக்கழகங்களின் முறைமையில் போதுமான இட வசதிகள் இல்லாமையின் காரணமாக செலவைத் தாங்கக் கூடியவர்கள் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுக்குச் செல்வதன் விளைவாக பெருமளவு வெளிநாட்டுச் செலவாணி வெளிப்பாய்கின்றது. இப்பின்னணியில் உயர் கல்வியைத் தனியார் துறையினருக்குத் திறந்து விடப்படும் என்பதனை அரசு தெளிவாகத் தெரிவித்திருக்கின்றது. அதன் மூலம் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் இணைந்த பல்கலைக்கழகங்களை இலங்கையில் நிறுவ வாய்ப்பு வழங்கப்படும். பொருத்தமான சட்டதிட்டங்கள் மற்றும் பட்டப்பாடநெறியைக் கணிப்பீடு செய்து சான்றிதழ்ப்படுத்த தேவையான கொள்கைகளை செயற்படுத்தலின் அடிப்படையிலான பிரபல பல்கலைக்கழகங்களை இலங்கைக்குக் கவருவது மூலம் இப் பல்கலைக்கழங்கங்களுக்கு வெளிநாட்டு மாணவரைக் கவர முடியும். (25 புள்ளிகள்)

**3.** பின்வரும் பந்தியை வாசித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு சுருக்க விடை தருக.

நுண்பாக நிதிகள் துறை சேமிப்பு அமைப்புக்கள், சுழலும் சேமிப்புக் களரிகள், கொடுகடன் அமைப்புக்கள், அந்திய கால அல்லது இறப்புச் சங்கங்கள், சேமிப்புக்களின் ஏனைய பல்வேறு வகைகள், கொடுகடன் களரிகள்/ குழுக்கள் போன்ற பலவகையான அமைப்புக்களை உள்ளடக்குகிறது. "நுண்பாக தொழில் முயற்சியாளர்களுக்குத் தொழிற்படு மூலதனக் கடன்களை குறுகிய காலத்தில் வழங்குவதற்கும் அறவிடுவதற்கும் பயனுறுதி மிக்க பிணையங்களுக்கான பிரதியீடுகளை பயன்படுத்தும் கொடுகடன் முறைமையியல் மற்றும் வறுமை ஒழிப்பு உபாயம்" நுண்பாக நிதி நிறுவனம் எனவும் வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது. [மிகவும் வறிய மக்களுக்கு உதவும் ஆலோசனைக் குழு 2003 - Consultative Group to Assist the Poorest (CGAP)] தொழிற்பாட்டுச் செயற்பாடுகளின் நியதிகளில், இது முறை சார்ந்த, வங்கிகள் / நிதியியல் நிறுவனங்களால் பாரம்பரியமாக புறக்கணிக்கப்பட்ட குறிப்பாக வறுமையில் வாழும் மக்கள் உள்ளிட்ட குறைந்த வருமானமுடைய வாடிக்கையாளர்களை இலக்காகக் கொண்ட கடன்கள், காப்புறுதி, பணவனுப்பல்கள் மற்றும் ஏனைய பணிகள் (மதியுரை மற்றும் தொழில்நுட்பப் பணிகள்) உள்ளடங்கலான பல்வேறு நிதியியற் பணிகளை வழங்குகின்றது. அத்தகைய நுண்பாக நிதி குறைந்த வருமானம் பெறுபவர்களின் வருமான உருவாக்கச் செயற்பாடுகள் மற்றும் இயலளவுகளை

[பக். 2 ஐப் பார்க்க

முன்னேற்றுமெனவும் விரிவாக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. மிகவும் பிரபல்யமான மாதிரியாக சுய உதவிக் குழுக்களூடான கடன் வழங்கல் விளங்குகிறது. இம்மாதிரி நுண்பாக நிதித் துறையில் கடன் வழங்குவது போன்றே கடனை மீள அறவிடுவதற்காகவும் இந்தக் குழு முறையியல் வெற்றிகரமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

(i) நுண்பாக நிதிகள் துறையில் உள்ளடங்கும் நிறுவனங்கள் யாவை ?

(ii) நுண்பாக நிதியின் பணிகள் யாவை என விளக்குக.

(iii) நுண்பாக நிதிச் செயற்பாடுகளின் பிரதான நோக்கம் எது எனக் குறிப்பிடுக ?

(iv) நுண்பாக நிதி நிறுவனங்கள், நிதி இடை நடுவர்களாக எவ்வாறு செயற்படுகின்றன ?

(v) குறைந்த வருமானமுடையவர்களுக்கு தமது வாழ்க்கை நிலையை மேம்படுத்திக் கொள்ள இதன் மூலம் வழங்கப்படும் வழிகாட்டல் யாது ? *(15 புள்ளிகள்)*

**4.** பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழ் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு சுருக்க விடை தருக.

தெங்கு ஆராய்ச்சி நிறுவனம், தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் தெங்கு பயிற்செய்கைச் சபை 2011 இல் தெங்குத் துறையில் அவற்றின் அபிவிருத்திச் செயற்பாடுகளை தொடர்ந்து மேற்கொண்டது. தென்மாகாணத்தில் "வெலிகம தென்னோலை வாடல் நோய்" என்ற மாற்ற முடியாத நோய் தோற்றம் பெற்றமை நாட்டின் தெங்குக் கைத்தொழிலுக்குச் சாத்தியமான அச்சுறுத்தலாக இருக்கக் கூடிய நிலைமை உருவாக்கியுள்ளது. 18,109 தென்னை மரங்கள் இவ்வாண்டு அழிக்கப்பட்ட வேளையில் மேற்கூறிய நோயால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் தாக்கு பிடிக்கக்கூடிய தென்னை வகைகளை அறிமுகப்படுத்தும் முதல் படிமுறையாக தென்னம் கன்றுகளைப் பகிர்ந்தளிப்பதற்கான ஒழுங்குமுறைகளும் மேற்கொள்ளப்பட்டன. பாம் மரங்களை (Oil Palm) வளர்க்கும் பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு உதவுவதற்கு தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்தில் பாம் மர ஆராய்ச்சிக்கான புதிய பிரிவொன்று நிறுவப்பட்டது. இது சமையல் எண்ணெயின் கேள்விக்கும் வழங்கலுக்கும் இடையேயான இடைவெளியை நிரப்புவதற்குப் பாம் தாவரத்தின் பயிற்செய்கையை உள்நாட்டில் மேற்கொள்வதை ஊக்குவிக்கும். தெங்குப் பெருந்தோட்ட உதவித்தொகைத் திட்டத்துக்குத் தேவையான காணியின் குறைந்தபட்ச அளவு அரை ஏக்கரிலிருந்து கால் ஏக்கருக்குக் குறைக்கப்பட்டது. இதேவேளை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அடையாளம் காணப்பட்ட 70,000 ஏக்கரில் தெங்குப் பயிற்செய்கையை அதிகரிக்கும் பொருட்டு கிளிநொச்சியில் நாற்று மேடையை நிறுவுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும் தெங்குத்துறை அபிவிருத்தியை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கம் தெங்குத்துறை அபிவிருத்திக்காகப் புதிய அமைச்சை நிறுவியுள்ளது.

(i) தற்போது இலங்கையில் தெங்குச் செய்கை அபிவிருத்திகாகச் செயற்படும் நிறுவனங்கள் யாவை ?

(ii) பாம் மரங்களின் செய்கையைத் தாபிக்க நேரிட்டதன் காரணங்கள் யாவை ?

(iii) அண்மைக்காலங்களில் புதிய தெங்கு பேதங்களை அறிமுகப்படுத்தியமைக்கான மிக அண்மிய காரணம் யாது ?

(iv) தெங்குச் செய்கையில் விரைவான அபிவிருத்தியை எதிர்பார்க்கும் **இரண்டு** வலயங்களைப் பெயர் குறிப்பிடுக.

(v) தெங்கு பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பதற்காக அரசு பின்பற்றும் நடைமுறைகள் **மூன்றைக்** குறிப்பிடுக. *(15 புள்ளிகள்)*

**5.** பின்வரும் பந்தியின் பொழிப்பை **ஒரு** வாக்கியத்தில் எழுதுக.

இன்று அநேகமான நாடுகள் செலவுச் சிக்கனமான முறையில் புதியதும் நவீனத்துவமுமான உற்பத்திகளைத் தயாரிப்பதற்கேற்ற விதத்தில் கைத்தொழில் துறையினை அபிவிருத்தி செய்வதில் நானோ தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி வருகின்றன. உதாரணமாக சாதாரணமான புடவை மற்றும் துணிகள், திரவங்களையோ அல்லது வேறு ஏதேனும் பொருட்களையோ ஈர்த்துக் கொள்ளாத முறையில் பழுது மற்றும் கறை படியும் தன்மைகளைத் தாங்கக்கூடிய புடவைகளாக மாற்றப்படுகின்ற அதேசமயம் தாமரை விளைவு என்று அறியப்படும் தாமரை மலரில் காணப்படும் மிக உயர்ந்த நீர் விலக்குத் திறனானது நானோ தொழில்நுட்பத்தின் உதவியுடன் தீந்தைகளில் அபிவிருத்தி செய்யப்பட்டு கட்டடங்களின் சுவர்களில் நீர் மற்றும் தூசு என்பவை விலக்கப்பட்டு அவை நீண்ட காலம் சுத்தமாக இருப்பதை உறுதிப்படுத்தியது. அதே போன்று வானுயர்ந்த கட்டடங்களின் யன்னல்களைச் சுத்தப்படுத்துவதிலுள்ள சிரமமானது நானோ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சுயமாகவே சுத்தப்படுத்தக்கூடிய மேற்பரப்பில் தூசுக்களோ அல்லது வேறு ஏதேனும் துகள்களோ படியாத விதத்திலான கண்ணாடிகளைத் தயாரிப்பதன் மூலம் தீர்க்கப்பட்டது. இவை கைத்தொழில் துறையில் நானோ தொழில்நுட்பங்களை எவ்வாறு பயன்படுத்த முடியும் என்பதற்குச் சில உதாரணங்களாகும். *(10 புள்ளிகள்)*

***